# தன்னை வெல்வான்! தரணியை வெல்வான்!

■ நீரை.மகேந்திரன்



“கட்சிக்கு முடிவெடுக்கும் ஆற்றல் பெற்ற தலைவர் தேவை, இந்தச் சூழலில் கலைஞரைவிட உறுதியோடு செயலாற்றக் கூடியவர் இல்லை”. 1969-ஆம் ஆண்டில் பேரறிஞர் அண்ணா மறைவுக்குப் பின் கழகத் தலைமை பொறுப்பை யார் ஏற்பது என்கிற கேள்வியின்போது , கலைஞர்தான் சரியானவர் எனத் துணை நின்றவர் தந்தை பெரியார்.

தந்தை பெரியார் தனது உணர்வுகளை எப்போதும் யாரிடத்திலும் அவ்வளவு எளிதாக வெளிக்காட்டிக் கொண்டதில்லை. ஆனால், கலைஞரிடத்தில் மட்டும் தனிப் பாசத்தைப் பல நேரங்களில் வெளிப்படுத்திக் காட்டியிருக்கின்றார். 1943-ஆம் ஆண்டிலேயே “தன்னோடு வா” என கலைஞரை ஈரோட்டுக்கு அழைத்துக் கொண்டதும் அவரது கணிப்புதான்.

## நமது கலைஞர்

கலைஞரின் ஆட்சி நிர்வாகத் திறனைப் பாராட்டும்விதமாக பெரியார் கூறுகையில், “கலைஞர் நமக்குக் கிடைத்தற்கரிய வாய்ப்பு என்றே சொல்ல வேண்டும். ஒரு பகுத்தறிவாளராகவும், ஆட்சிக்கலையில் அரிய ராஜதந்திரியாகவும் நடந்துவருவதன் மூலம் தமிழர்களுக்குப் புது வாழ்வு தருபவராகிறார் நமது கலைஞர்” எனப் புகழ்ந்தார் பெரியார்.

அவர் ‘நமது கலைஞர்’எனக் கூறியது மிகப்பெரும் பொருள் கொண்டது. சொல்லப்பட்ட ஆண்டு அந்த அளவுக்கு அரசியல் முக்கியத்துவம் கொண்டது. ஆம், 1973-ஆம் ஆண்டு, காஞ்சிபுரத்தில் ஒரு பொதுக்கூட்டம். அதில் பெரியார் உரையாற்றுகிறார்

“கலைஞர் அவர்களின் ஆட்சியைப் போல எந்த அமைச்சரும் ஆட்சி செய்யவில்லை. மற்ற முதல்வர்கள் செய்த காரியங்களையும் கலைஞர் அவர்கள் செய்து இருக்கும் காரியங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால், மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம்தான் இருக்கும்.

நமது கலைஞர் அவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள், ஏழை எளியவர்கள் தொழிலாளர்கள்’ ஆகியவர்களை மனதில்கொண்டு பல நன்மைகளைச் செய்து வருகிறார். எதிரிகள் பொறாமை உணர்ச்சியினால் இதனைப் பாராட்டாததோடு தூற்றியும் திரிகின்றார்கள். உண்மையிலேயே சாதி ஒழிந்த சமுதாயமாக நாடு ஆக வேண்டும் என்ற கருத்தில்தான் கலைஞர் எல்லா மக்களும் கோயிலுக்குப் போகலாம். பூசை பண்ணலாம் என்ற உத்தரவு போட்டார்.

இன்றைய நிலையில், கலைஞர் அவர்கள், ஆட்சிப்பொறுப்பில் இல்லாது வேறு யார் இருந்தாலும்கூட இவ்வளவு திறமையாக எதிரிகளைச் சமாளித்துக் கொண்டு காரியம் ஆற்றி வர முடியாது. இப்படிப்பட்ட முதல்வரை நாம் பெற்று இருப்பது ஒரு நல்ல வாய்ப்பு என்று மக்கள் உணர வேண்டும். இவ்வளவு அரிய பெரிய காரியங்களை எல்லாம் நமது நலன் கருதிச் செய்கின்ற ஆட்சியினை ஆதரிக்க வேண்டும்” என்கிறார் பெரியார்.

கலைஞரின் ஆட்சிக்கலைக்கு முன்பும் பின்பும் பெரியார் கொண்டிருந்த கருத்தைப் போலவே, பேரறிஞர் அண்ணாவும் கலைஞர் குறித்த வியப்பினை பல நேரங்களில் வெளிப்படுத்துகிறார். “நான் சொல்லாமலேயே செய்து முடிக்கும் ஆற்றலைப் பெற்றவர் கருணாநிதி” என்கிறார் பேரறிஞர் அண்ணா.

## ஈடு இணை இல்லாதவர்

“என்னை முழுவதும் அறிந்தவர்கள்தான் கழகத்திலே இருக்கிறார்கள். அதிலே முற்றிலும் அறிந்தவர் என்று சொல்லத்தக்கவர்களிலே கருணாநிதிக்கு மிகச் சிறந்த இடம் உண்டு. அவர் மூலமாக நானும் நாடும் இன்னும் நிரம்ப எதிர்பார்க்கிறோம்” என்றும் “கருணாநிதிக்கு ஈடு கருணாநிதிதான்” என்றும் குறிப்பிட்டவர் பேரறிஞர் அண்ணா.

‘கல்லக்குடிப் போராட்டமா? கருணாநிதி தலைமை தாங்கட்டும், ‘சென்னை மாநகராட்சித் தேர்தலா ? வேட்பாளர் தேர்வுக்குழு தலைமை கருணாநிதி’, ‘1956-ஆம் ஆண்டு தேர்தல் சிறப்பு மாநாடா ? தம்பி, கருணாநிதியிடம் பொறுப்பை ஒப்படை’ என நம்பிக்கை வைத்தார் அண்ணா.

‘இந்தக் கழகத்தில் பலதரப்பட்ட உணர்வுள்ளவர்கள், பல எண்ணங்கள் கொண்டவர்கள் யாராக இருந்தாலும், சிறப்பாகப் பணியாற்றக் கூடியவர்கள் உண்டு. எதிலும் நிதானமாகப் பணியாற்றக் கூடியவர்கள் உண்டு. அவர்களை எல்லாம் இன்னும் சிறப்பாக - திறம்படச் செயல்பட வைக்கத் திறமைசாலிகள் வேண்டும். அத்தகைய சிறப்புகளைப் பெற்றவர் என் தம்பி கருணாநிதிதான்’ என்று பலமுறை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைப் பற்றி, பேரறிஞர் அண்ணா குறிப்பிடுகிறார்.

‘என் தம்பிகள் நான் சொல்வதைச் செய்து முடிப்பார்கள். ஆனால், தம்பி கருணாநிதி மட்டும்தான் நான் சொல்லாமலேயே செய்து முடிக்கக்கூடிய ஆற்றலைப் பெற்றிருப்பவர்’ என அண்ணாவின் சொற்களில் கலைஞர் மீது வைத்த நம்பிக்கையைக் காணலாம்.

“வண்ணங்கள் பல இருந்தாலும், அந்த வண்ணங்கள் நல்ல ஓவியத்தை உருவாக்க ஓவியப் புலவன் தேவை. ஒரு கட்சியில் பலதரப்பட்டவர்கள் இருந்தாலும், சிறப்பாகச் செயல்பட வைக்கும் திறமையுள்ளவர்கள் மூலம், அது போய் அவர்களைச் சேர வேண்டும். தம்பி, கருணாநிதி அந்தச் சிறப்புகளை நன்கு பெற்றவர்களில் ஒருவர்.

**‘என் தம்பிகள் நான் சொல்வதைச் செய்து முடிப்பார்கள். ஆனால், தம்பி கருணாநிதி மட்டும்தான் நான் சொல்லாமலேயே செய்து முடிக்கக்கூடிய ஆற்றலைப் பெற்றிருப்பவர்!’**

“கலைத்துறையிலே கருணாநிதி பெற்ற புகழ் கொஞ்சநஞ்சமல்ல; ‘பராசக்தி’ மூலம் அவர் அடைந்த புகழோடு மேலும் மேலும் பல திரைப்படங்களாலும் அவர் புகழடைந்தார். கருணாநிதி அந்தக் கலையை நம்பி, அந்தத் துறையிலேயே சென்றிருந்தால் பணத்தோடும் வாழலாம்; பகட்டோடும் வாழலாம். ஆனால், அவர் கொண்ட இலட்சியத்தை மறந்து விடவில்லை” என்றார் அண்ணா.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோர் கலைஞரின் தலைமைப் பண்பு, உழைப்பு வேகம் எல்லாம் அறிந்திருந்தாலும், கலைஞரின் நிதானம் அதன் அடிப்படையாக இருந்தது.

## தரணியை வெல்வான்

1965-ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் அவர் பாளையங்கோட்டை தனிமைச் சிறைக்குப் பின்னர் கலைஞரிடம் வெளிப்பட்ட நிதானம் அவரின் தலைமைப் பண்புகளில் ஒன்றாக மாறியது எனக் கணிக்கிறார் பேரறிஞர் அண்ணா.

“என் தம்பி கருணாநிதி தனிமைச் சிறையில் தவிக்கிறார் என்று சொன்னார்கள். தவறாகச் சொல்லிவிட்டார்கள், தம்பி கருணாநிதியைத் தனிமையில் தள்ளும் அளவிற்குக் கொடுமை அல்ல, அங்கு பாம்பும், பூரானும் இருக்கிறது” என ‘திராவிட நாடு’ ஏட்டில் எழுதினார் அண்ணா.

‘காஞ்சி’ இதழில் எழுதிய ஒரு கட்டுரையில், “சிறைக்கூடம் தள்ளப்படும் இலட்சியவாதிகளோ, பன்மடங்கு உறுதி கொண்டவர்களாவது மட்டுமல்ல, தன்னைப் பற்றிய எண்ணம், தனது நலனை பற்றிய நினைப்பு, தனது குடும்பம் பற்றிய எண்ணம் இவைகளைக் கூட மறந்து விடவும், தான் தனக்காக அல்ல; மற்றவர்களுக்காக என்ற நெறியினை உணர்ந்து மகிழ்ந்திடவும்; தன்னைப் பற்றிய எண்ணம் எழுப்பிவிடும் ஆசை, அச்சம், கவலை, கழகம், பிரிவாற்றாமை போன்ற உணர்ச்சிகளை வென்றிடவும் ஒரு துறவு நிலையைப் பெற்றெடுக்கிறது சிறைச்சாலை.

பாளையங்கோட்டை சிறைவாசலில் கண்டேன் இந்தப் பேருண்மையை” எனக் குறிப்பிட்டதுடன் முத்தாய்ப்பாக “தன்னை வெல்வான், தரணியை வெல்வான்” என முடித்திருந்தார். கலைஞர் தரணியை வென்றது, அண்ணாவின் நம்பிக்கையன்றி வேறில்லை.

---

## திராவிட இயக்க இதழ்கள் - முல்லை



1945-ஆம் ஆண்டு பாவேந்தர் பாரதிதாசனுக்காகவே தொடங்கப்பட்ட இதழ் ‘முல்லை’. அதைத் தொடங்கியவர் முத்தையா. பின்னாளில் ‘முல்லை’ முத்தையா என்று அழைக்கப்படலானார். பாரதிதாசன் அந்த இதழை ஆதரித்தார்.

மாதந்தோறும் வெளிவந்த இதன் முதல் இதழில் ‘போஷகர்’ என்ற சொல்லுக்கு ‘ஆதரவாளர்’ என்ற தமிழ்ச் சொல் முதன்முதலாகப் பயன்படுத்தப்பட்டது.

முல்லை இதழில் தொ.மு.சி. ரகுநாதன் ஆசிரியராகப் பணியாற்றி உள்ளார். இதழ் வெளிவந்த காலத்தில் புதுமைப்பித்தன், கு.அழகிரிசாமி, லா.சா.ரா ஆகியோரின் படைப்புகளையும் தாங்கி, ஓர் இலக்கிய இதழாகவும் ‘முல்லை’ திகழ்ந்தது. கண்ணதாசனும் இதில் பங்களித்துள்ளார்.

மொத்தம் 12 இதழ்கள் மற்றும் ஒரு தொகுப்பு மலர் ஆகியவற்றுடன் வெளிவந்து நின்றுபோனது இந்த இதழ். அந்த ஓர் ஆண்டு இதழ்களில் வெளிவந்த சிறுகதைகள் ‘முல்லை கதைகள்’ என்ற பெயரில் பின்னாளில் நூலாக வெளியிடப்பட்டது. முல்லை பதிப்பகத்தின் முதல் வெளியீடு அந்த நூல்தான். இந்த இதழ் குறித்து, ஓர் அறிமுக நூலை வரலாற்றாய்வாளர் ஆ.இரா.வேங்கடாசலபதி எழுதியுள்ளார்.

## :ப்ளாஷ்பேக்



### இணையப் பேனா!



செந்தில்நாதன்

1999 -ஆம் ஆண்டு பிப்ரவரி 8,9,10 ஆகிய தேதிகளில் முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையில், ‘தமிழிணையம்-99’ மாநாடு நடைபெற்றது. அப்போது தகவல் தொழிநுட்பப் பணிக் குழுவின் தலைவராக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் துணைத் தலைவராக முரசொலி மாறன் அவர்களும் செயல்பட்டார்கள். இந்த மாநாட்டில் இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, பிரிட்டன், சுவிட்ஸர்லாந்த் ஆகிய நாடுகளைச் சேர்ந்த - கணினித் துறை வல்லுநர்கள் தமிழ்மொழிக்கான குறியீடு தர நிர்ணயத்தை உருவாக்கினார்கள். இந்திய மொழிகளில், மொழிக்கான தர நிர்ணயம் உருவாக்கப்படுவது, அதுவே முதல்முறை. அப்போது தமிழ்நாடு அரசால் ஊடக ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்டேன். மாநாடு சிறப்புற நடைபெற்று முடிந்த பிறகு, மாநாட்டில் பங்காற்றிய அனைவரும் தலைமைச் செயலகத்தில் கலைஞரைச் சந்தித்து புகைப்படம் எடுத்துக்கொண்டோம். ‘தமிழிணையம் 99’-லிருந்து ‘கணித்தமிழ்-2024’ வரை வந்திருப்பதை நினைத்தால் வியப்பாகத்தான் இருக்கிறது.

**-ஆழி.செந்தில்நாதன், ஐலேசா நிறுவனத் தலைவர், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் : youthwing@dmk.in


## கருவூலம்

### சிங்கத்தின் கால்கள் ஓய்ந்தன!

**1950-ஆம் ஆண்டு நாகை மாவட்டம், செம்பனார்கோயிலில் திராவிடர் கழகத்தின் சார்பில் நடந்த பொதுக்கூட்டத்தில் தந்தை பெரியார் பேசினார். ஒலிபெருக்கி இல்லாமல், ஒலிபெருக்கி வந்த பின் என 30 ஆண்டுகள் நின்றுகொண்டே தடியைச் சுழற்றியபடி மணிக்கணக்கில் பேசிய பெரியார், முதன்முதலில் அந்தக் கூட்டத்தில்தான் நிற்க முடியாமல் நாற்காலியில் அமர்ந்து பேசினார். அதன்பிறகு 23 ஆண்டுகள் பெரியார் மேடையில் அமர்ந்தவாறே பேசினார்.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 394




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.